செய்தி வெளியீடு நாள் : 25.04.2023

**சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24 நிதியாண்டிற்கான அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக வடசென்னை பகுதிகளில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில் ஆய்வு**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி இன்று (25.4.2023) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24 நிதியாண்டிற்கான அறிவிப்புகளை செயல்படுத்தும் விதமாக மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் வடசென்னை பகுதிகளில் நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில் 2023-24 நிதியாண்டிற்கான சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு 50 அறிவிப்புகளை அறிவித்தார்.

இதில் சென்னைப் பெருநகர பகுதியிலுள்ள 26 சட்டமன்ற தொதிகளின் மேம்பாட்டிற்கான 34 அறிவிப்புகளை செயல்படுத்தும் வகையில் முதற்கட்டமாக இன்று (25.4.2023) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வடசென்னை பகுதிகளான சென்னை கொண்டித்தோப்பு பகுதியில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு மையம், இயன்முறை சிகிச்சை (Physiotherapy) மற்றும் இரத்த சுத்திகரிப்பு மையம் (Dialysis Centre) அமைப்பது தொடர்பாக கள ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து சென்னை தண்டையார்பேட்டையில் 6.67 ஏக்கரில் உள்ள பேருந்து பணிமனை ரூ.25 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் பல மாநகரப் பேருந்து வழித்தடங்களும் அடங்கிய பேருந்து நிலையமாகவும் மற்றும் பணிமனையாகவும் நவீனமயமாக்குவது தொடர்பாக நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

அதனை தொடர்ந்து வடசென்னை காசிமேட்டில் உள்ள கடற்கரைப் பகுதி, ரூ.6 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சூழலுக்கேற்ப, வடசென்னை மக்கள் பயன்பெறும் வகையில் மேம்படுத்துதல் மற்றும் சென்னை இராயபுரம் மூலக்கொத்தளத்தில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் புதிய சமுதாய நலக்கூடம் அமைப்பது தொடர்பாகவும் மாண்புமிகு சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் (ம) தலைவரும் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகிய பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் 2023-24 நிதியாண்டிற்கு அறிவித்தத் திட்டங்களின் பணிகளை விரைவாக செயல்படுத்திட அலுவலர்களை அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி. ஆர். பிரியா அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் (இராயபுரம்) திரு. ஐட்ரீம். மூர்த்தி அவர்கள், (ஆர்.கே.நகர்) திரு. ஜே.ஜே.எபிநேசர் அவர்கள், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் திரு.அன்சூல் மிஸ்ரா இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு. எம். சிவகுரு பிரபாகரன்,இ.ஆ.ப., நகரமைப்புக் குழுத் தலைவர் திரு. இளைய அருணா, சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு. ருத்ரமூர்த்தி, திரு.பாலசுப்பிரமணியன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.